DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.17**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சத்தியக்குமார் |
| Father Name | : | பாண்டியராஜன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025.

(2 எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது சர்வேயர் காலனியில் குடியிருக்கிறேன். நான் சிக்கன் கடை வைத்திருக்கிறேன். நான் சம்பவ சமயத்தில் அழகர் நகர் பஸ் ஸ்டாப் அருகில் சிக்கன் கடை வைத்திருந்தேன். எனக்கு குரு சலூன் கடை உரிமையாளர் அர்ச்சுணன் என் கடைக்கு பக்கத்தில் கடை வைத்திருந்தார். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் எனது சிக்கன் கடையை அடைத்துவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், மறுநாள் 22.11.2015ம் தேதி காலை 7 மணிக்கு கடையை திறந்த போது, குரு சலூன் கடை உரிமையாளர் அர்ச்சுணன் என்பவர் 21.11.2015ம் தேதி இரவு சுமார் 11.10 மணியளவில் தன் கடைக்கு முன்பு நடந்த

சம்பவத்தை கூறினார் என்றும், நான் அந்த சம்பவத்தை அவர் மூலமாக கேள்விப்பட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.